www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணை பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - I<br>Christianity - I | Two Hours<br>Gr. 13 (2021) | 43 | T | I |

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. பொது மக்களின் பிரதி எனப் பொருள்படும் திருவிவிலியத்தின் பிரதி.
    (1) மசரொட்டிக் 2) செப்துவாஜிந்த் 3) வல்கேற் 4) எபிரேயம் 5) வெளிப்பாடு

02. செப்துவாஜிந்த் பிரதியில் அடங்கியுள்ள இணைத் திருமுறை நூல்களில் ஒன்று,
    1) தோபித்து 2) எஸ்தர் 3) யோபு 4) புலம்பல் 5) இனிமைமிகு பாடல்

03. தாவீதின் பரம்பரையில் இறுதி அரசன்
    1) யோசியா 2) மனாசே 3) யோயாக்கிம்
    4) செதேக்கியா 5) யோயாக்கின்

04. யோர்தான் நதி ஆரம்பமாகின்ற மலைத் தொடராக அமைவது,
    1) ஒலிவமலை 2) தாபோர் 3) லெபனான் 4) ஏர்மோன் 5) கெரிசிம்

05. இஸ்ரயேலின் முதல் அரசனாகிய சவுலின் தந்தை
    1) பெஞ்சமின் 2) கீசு 3) ஈசாய் 4) தாவீது 5) ரெகபெயாம்

06. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் அரமேய மொழியில் எழுதப்பட்டமைக்கான காரணம்.
    1) உரோம பேரரசின் காலத்தில் யூதமக்கள் அரமேய மொழிக்குப் பழக்கப்பட்டிருந்தமை
    2) ஆரம்ப கால யூதர்களின் தாய் மொழியாகக் காணப்பட்டமை
    3) கிரேக்க கலாசாரப் பின்னணியில் வாழ்ந்தமையால் அரமேய மொழிக்குப் பழக்கப்பட்டிருந்தமை.
    4) அசீரிய அடிமைத் தனத்தின்போது அரமேய மொழிக்குப் பழக்கப்பட்டிருந்தனர்.
    5) பபிலோனிய அடிமைத் தனத்தின்போது அரமேய மொழிக்குப் பழக்கப்பட்டிருந்தனர்.

07. திருவிவிலியம் பற்றிய வெளிப்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
    A – வழிபாட்டிற்குரிய நூல்
    B – மறைநூல்
    C – இறை ஏவுதலால் எழுதப்பட்ட நூல்
    D – வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட நூல்
    E – இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட இறைவார்த்தைகளை மட்டும் உள்ளடக்கிய நூல்

    மேற்கூறிய வெளிப்பாடுகளில் திருவிவிலியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபடுவதற்கு ஏதுவான இரு காரணிகள்.
    1) C, E 2) A, B 3) A, C 4) B, E 5) A, D

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

08. தாவீது மன்னன் குறித்த கீழ்வரும் கூற்றுக்களை கவனத்திற் கொண்டு அவற்றுள் சரியான கூற்றுக்களை குறிப்பிடுக.

A – கப்பல்களைக் கொண்டு சர்வதேச வியாபாரத்தில் ஈடுபட்டார்.

B – சாமுவேல் இறைவாக்கினர் மிஸ்பாவில் அரசனாகத் திருப்பொழிவு செய்தார்.

C – தனது ஆட்சிக் காலத்தில் உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்கு கொண்டு வந்தார்.

D – எருசலேம் ஆலயத்தைக் கட்டினார்

E – தாவீது அரசன் காலத்தின் ஆரம்பத்தில் இரட்டை ஆட்சி நிலவியது.

1) A, C  2) B, D  3) A, E  4) C, E  5) D, E

09. கீழ்வரும் கூற்றுக்களில் இஸ்ரயேலின் வட அரசு குறித்த தவறான கூற்றாக அமைவது,

1) எரொபவாம் கி.மு 922 இல் அரசனானான்
2) வட அரசின் மக்கள் இறைவனை எருசலேமில் வழிபட்டனர்.
3) இறைவாக்கினர்கள் ஆமோஸ், ஒசேயா போன்றவர்கள் வட அரசில் பணியாற்றினார்கள்.
4) வட அரசின் யாத்திரைத் தலங்களாக பெத்தெல், தாண் என்பவை காணப்பட்டன.
5) வட அரசின் தலைநகர் செக்கேம்

10. குலமுதுவர்களின் காலத்திற்கு உட்படும் காலப் பகுதி ஆனது

1) கி.மு 2600 – 2300  2) கி.மு. 2300 – 2000  3) கி.மு. 1400 – 1200
4) கி.மு. 1700 – 1400  5) கி.மு. 2000 – 1700

11. மனிதனின் அழிவுக்கு காரணம் அகங்காரம் என்பதை எடுத்துக் காட்ட விவிலிய எழுத்தாளர் முன்வைக்கும் கதை.

1) நோவா  2) பாபேல் கோபுரம்  3) காயீன், ஆபேல்
4) ஆதாம் ஏவாள்  5) லோத்து

12. உடன்படிக்கையோடு இணைக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருக்க வேண்டும் என்பவற்றை உபகருப்பொருளாகக் கொள்ளும் மரபு.

1) D மரபு  2) J மரபு  3) E மரபு  4) P மரபு  5) J, P மரபு

13. இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியாகிய வாக்களிக்கப்பட்ட நாட்டை உரிமையாக்கிக் கொடுப்பதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுவது,

1) ஈசாக்கின் அழைப்பு  2) யாக்கோபுவின் அழைப்பு  3) யோசேப்பின் அழைப்பு
4) மோசேயின் அழைப்பு  5) காயீனின் அழைப்பு

14. மேய்ப்பர்களின் விழாவான இஸ்ரயேல் பாஸ்காவின் முக்கிய அம்சம்.

1) புளியாத அப்பம்  2) ஆட்டுக்குட்டியின் இரத்தம்  3) தலைப் பேறுகளை பலியிடல்
4) புதிய அறுவடை  5) திராட்சை இரசப்பானம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

15. இஸ்ரயேல் மக்கள் 'மட்சா' எனும் எபிரேயச் சொல்லினால் அழைப்பது.

1) புளிப்பற்ற அப்பம் 2) திராட்சை இரசம் 3) பாஸ்கா
4) தலைமகன் அர்ப்பணம 5) பத்துப் பெருந்துன்பம்

16. 'எசாயா' என்பதன் பொருள்

1) இறைவன் உயர்த்தினார் 2) ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்
3) யாவே மீட்பர் 4) தலைமகன் அர்ப்பணம்
5) பத்துப் பெருந்துன்பம்

17. உலர்ந்த தரையிலிருந்து துளிர் விடுவதுபோல் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நபராக துன்புறும் ஊழியனை எடுத்துக் காட்டும் இறைவாக்கினர்.

1) எரேமியா 2) ஓசேயா 3) ஆமோஸ் 4) எசேக்கியேல் 5) எசாயா

18. 'இறைவனின் அன்பின் இறைவாக்கினர்' என அழைக்கப்பட்டவர்.

1) ஆமோஸ் 2) எசேக்கியேல் 3) ஓசேயா 4) எசேக்கியேல் 5) எசாயா

19. பழைய ஏற்பாட்டில் ஞான இலக்கியத்திற்கு உட்பட்ட ஏழு நூல்களில் உள்ளடங்கும் இரண்டு நூல்கள்.

1) சாலமோனின் ஞானம், தோபித்து 2) புலம்பல், யோபு
3) இனிமைமிகு பாடல், சபை உரையாளர் 4) நீதிமொழிகள், யோபு
5) திருப்பாடல், யூதித்து

20. நற்செய்தி எழுதப்பட்டது தொடர்பாகத் தரப்பட்டுள்ள பின்வரும் வெளிப்பாடுகளைக் கருத்திற் கொள்க.

A – எருசலேம் நகரின் அழிவுக்குப் பின்னர் எழுதப்பட்டது
B – பலஸ்தீனாவுக்கு வெளியே வாழ்ந்த புற இனச்சூழலில் எழுதப்பட்டது.
C – நீரோ மன்னன் காலத்தில் உயிர்த் தியாகம் செய்த கிறிஸ்தவ விசுவாசிகளின் ஆன்மீக ஆறுதலடைய எழுதப்பட்டது.
D – யூத மக்கள் எதிர்பார்த்த மெசியாவை தெளிவுபடுத்த எழுதப்பட்டது.

இவற்றில் லூக்கா நற்செய்தியுடன் தொடர்புடைய சரியான வெளிப்பாடுகள்.

1) A, C 2) B, D 3) A, B 4) C, D 5) B, C

21. பவுலின் மனமாற்றமானது

1) எபேசு நகரில் நடைபெற்றது 2) எருசலேமில் நடைபெற்றது
2) சிரிய அந்தியோகியா தொழுகைக் கூடத்தில் 4) தமஸ்குவிற்கான பாதையில் நடைபெற்றது
3) சமாரியாவிற்கான பாதையில் நடைபெற்றது.

22. பின்வருவோரில் யாரிலிருந்து சதுசேயர் எனும் சமயக் குழுவினர் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

1) ஆரோன் குடும்பத்திலிருந்து 2) பெஞ்சமின் குலமரபிலிருந்து
3) சாதோக் குருவின் வழிமரபிலிருந்து 4) யூதா குலரேபின் அரச குமாரற்களிடமிருந்து
5) பரிஷ் எனும் பிரிவினரிடமிருந்து

Agaram.LK - Keep your dreams alive!

23. இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் உயர் வகுப்பை சார்ந்தவர்கள் யார்?
    1) எசேனியர், சமாரியர்
    2) பரிசேயர், தீவிரவாதிகள்
    3) சதுசேயர், வரிவசூரிப்பவர்
    4) பரிசேயர், சதுசேயர்
    5) செல்வந்தர், மந்தை மேய்ப்பவர்

24. இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் புனிதபவுல் அக்கில்லா, பிரிஸ் சில்லாவை சந்தித்தது.
    1) ஏதென்ஸ் 2) கொரிந்து 3) பிலிப்பி 4) சிரோவா 5) தெசலோனிக்கா

25. மலைப்பொழிவில் புதிய ஒரு சட்டத்தினை வழங்குகின்ற புதிய மோசேயாக இயேசுவை எடுத்துக் காட்டுகின்ற நற்செய்தியாளர்.
    1) லூக்கா 2) மாற்கு 3) மத்தேயு 4) யோவான் 5) திருத்தூதர் பணி

26. இயேசுவின் பாடுகள், இறப்பு. உயிர்ப்பு என்பவற்றிற்கு முக்கிய இடமளித்துள்ள நற்செய்தியாளர்
    1) மத்தேயு 2) லூக்கா 3) யோவான் 4) திருத்தூதர்பணி 5) மாற்கு

27. இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றது.
    1) இதை திட்டத்தை நிறைவேற்றுதல்
    2) யூத கலாசாரத்திற்கு மதிப்பளித்தல்
    3) இறைமகன் என்பதை வெளிப்படுத்தல்
    4) பாவ மன்னிப்பு பெறல்
    5) அரசராக வெளிப்படுத்துதல்

28. ஆரம்ப கால கிறிஸ்தவ குழுவினரிடம் காணப்பட்ட மூன்று பண்புகள்.
    1) நோன்பு, ஒற்றுமை, திருப்பயணங்கள்
    2) தியானம், நோன்பு, வேலை
    3) பொது வாழ்வு, ஒற்றுமை, திருப்பயணங்கள்
    4) அமைதி, குழும வாழ்வு, செபம்
    5) ஒற்றுமை, செபம், பகிர்வு

29. செசாரியாவில் வாழ்ந்த நூற்றுவர் தலைவர் கொர்னேலியுவின் மனமாற்றமானது.
    1) உரோம ஆட்சியாளரின் கோபத்திற்கு உள்ளாக்கப்படல்.
    2) பிற இனத்தவர்கள் மனந்திரும்புவதற்கான வழி திறக்கப்பட்டது.
    3) யூதர்களின் கோபத்திற்குள்ளாகுதல்
    4) யூதர்களிற்கும், புற இனத்தவருக்குமிடையேயான பகைமை நீக்கப்பட்டது.
    5) திருத்தூதர்களின் கண்டனத்திற்குள்ளாகியமை

30. எருசலேம் சங்கம் கூட்டப்பட்டமைக்கான பிரதான காரணமாக அமைவது,
    1) புற இனத்தவர்கள் கிறிஸ்தவத்திற்கு மனமாற்றமடைந்தபோது விருத்த சேதனம் செய்தல்.
    2) அதிகளவான புறஇனத்தவர்கள் திருச்சபையில் இணைந்தமை
    3) பவுலுக்கும், பேதுருவுக்கும் இடையிலான கருத்து முரண்பாடு
    4) நற்செய்திப் பணியில் யூத இனத்தவரின் அதிகளவான பங்களிப்பு
    5) திருச்சபையின் தருமப் பணிகள்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

31. புனித அருஸ்தினார் குறித்த கூற்றுக்களை கவனத்தில் கொள்க.

A - இலத்தீன் சபைத் தந்தையர்களில் உயர்வானவர்.

B – அவர் எழுதிய பாவ சங்கீர்த்தனம் மிக முக்கியமான நூல்

C – கிறிஸ்தவ இலத்தீன் இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்.

D – மனந்திருப்புவதற்கு முன் மணிக்கேய பேதகத்தினை பின்பற்றினார்.

E – வல்கேற் என்ற இலத்தீன் மொழி வேதாகமத்தை மொழிபெயர்த்தார்.

இவற்றுள் சரியான கூற்றினை தெரிவு செய்க.

1) A, B, D 2) A, B, C 3) A, C, E 4) C, D, E 5) B, D, E

32. எருசலேம் சங்கத்தில் எடுக்கப்படாத தீர்மானம்

1) பரத்தமையை தவிர்க்க வேண்டும்
2) சிலைகளுக்குப் படைத்ததை தவிர்க்க வேண்டும்
3) கழுத்து நெரித்து இறந்த மிருகத்தின் இறைச்சியை தவிர்க்க வேண்டும்.
4) இரத்தத்தை பயன்படுத்துதல் தவிர்க்க வேண்டும்.
5) பிற இனத்தவருடன் உணவு அருந்துதல் கூடாது.

33. திருச்சபைத் தந்தையர்களின் முக்கிய பணியாக அமைந்தது.

1) அப்பம் பிட்குதல்
2) சமூகப் பணி ஆற்றுதல்
3) நீண்ட நேர செபங்களில் ஈடுபடல்
4) மறைத்தூதுப் பயணங்களில் ஈடுபடல்
5) பேதகங்களுக்குப் பதிலளித்தல் மூலம் கிறிஸ்தவ மறையைப் பாதுகாத்தல்.

34. 'மரியா இறைவனின் தாய்'எனப் பிரகடனப்படுத்திய பொதுச் சங்கம்

1) கொன்ஸ்தாந்து நோபிள் பொதுச் சங்கம்
2) கல்செடோன் பொதுச் சங்கம்
2) நிசேயா பொதுச் சங்கம்
4) எபேசு பொதுச் சங்கம்
3) எருசலேம் பொதுச் சங்கம்

35. பின்வருவோரில் இலத்தீன் திருச்சபைத் தந்தையர்கள்

1) புனிதர்களான, ஜஸ்ரின், நிசேயா கிரகோரியார் அகுஸ்தினார்.
2) புனிதர்களான – பசில், அம்புரோஸ், அகுஸ்தினார்.
3) புனிதர்களான – ஜெரோம், அகுஸ்தினார், பசில்
4) புனிதர்களான அம்புறோஸ், பெரிய கிரகோரியார், ஜெரோம்
5) புனிதர்களான, அத்தனாசியார், பசில், ஜெரோம்

36. கப்புச்சியன் துறவறசபை பற்றிய தவறான கூற்றைத் தெரிவு செய்க.

1) பிரான்சிஸ்கன் துறவற சபையிலிருந்து இச்சபை இச்சபை உருவாகியது.
2) புரஸ்டஸ்தாந்து சீர்திருத்தவாதிகளுக்கு எதிராகப் போதித்தனர்.
3) புனித பிரான்சிஸ் அசீசியினால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது.
4) எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.
5) இச்சபையினர் கடின உழைப்பினால் கிடைக்கும் வருமானத்தில் வாழ்ந்தனர்.

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

37. பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.

A – புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்படுதல்

B – மறுமலர்ச்சியின் காரணமாக கீழ்மட்டத்தினர் உயர்மட்டத்திற்கு வருவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுதல்.

C – திருச்சபைக்குள் தோன்றிய புதிய தப்பான போதனைகள்

D – சமூகத்தில் நிலவிய புதிய சிந்தனைகள்

E – துறவற சபைகளுக்கிடையே காணப்பட்ட மோதல்கள்

இவற்றுள் புரட்டஸ்தாந்து சீர்திருத்தங்களுக்கு காரணமாய் அமைந்த அரசியல், சமூகப் பின்னணி பற்றிய சரியான கூற்றுக்கள்.

1) A, B, C 2) A, D, E 3) B, C, D 4) A, B, D 5) C, D, E

38. பின்வருவனவற்றுள் ஜோன்கல்வின் பற்றிய சரியான கூற்றுக்களைத் தெரிவுசெய்க.

1) இறைவன் தூய்மையான, நீதியான இறைவனாகத் தொடக்க முதல் வீற்றிருக்கிறார்.
2) திருமுழுக்கு, நற்கருணை எனும் இரு அருளடையாளங்கள் இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டன.
3) நம்பிக்கையினால் மட்டுமே மனிதன் மீட்பினைப் பெறலாம்.
4) விவிலியம் மட்டுமே உண்மையை அறிவதற்கான சரியான வழி.
5) தவக்கால நோன்பை ஊக்குவித்தார்.

39. பொதுச் சங்கங்களும் அவற்றில் விவாதிக்கப்பட்ட பேதகங்களும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான சோடியை இனங் காண்க.

| | பொதுச் சங்கம் | | பேதகம் |
|---|---|---|---|
| 1) | நிசேயா | - | கியுத்திக்கேய |
| 2) | எருசலேம் | - | பெலாஜியம் |
| 3) | எபேசு | - | நெஸ்தோரிய |
| 4) | கல்செடோன் | - | மசதேனிய |
| 5) | கொன்ஸ்தாந்திநோபின் | - | ஆரிய |

40. சிலுவைப் போர் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றாக அமைவது,

A – புனித நாட்டினை விடுவிக்க நிகழ்த்தப்பட்டது

B – துருக்கியரிடமிருந்து திருச் சிலுவையினை மீட்பதற்கு நிகழ்த்தப்பட்டது.

C – எட்டு சிலுவைப் போர்கள் நிகழ்ந்தன.

D – ஐரோப்பியர்கள் சிலுவைப் போரில் ஈடுபட மறுத்தனர்

E – சிலுவைப் போர்கள் 11 – 13 வரையான நூற்றாண்டுகள் நடைபெற்றன.

1) A, B, C 2) A, C, E 3) B, D, E 4) B, C, D 5) C, D, E

41. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் மறைபரப்புப் பணிகளில் ஈடுபட்ட துறவற சபைகள்.

1) அகுஸ்தினார், பிரான்சிஸ்கன், ஆசீர்வாதப்பர், நல்லாயன் கன்னியர் சபையினர்.
2) பிரான்சிஸ்கன், இயேசு டொமினிக்கன், அகுஸ்தீன் சபையினர்
3) சலேசியன், சிஸ்ரேசியன், டொமினிக்கன், அகுஸ்தீன் சபையினர்
4) அமலமரித்தியாகிகள், கிளரேசியன், டொமினிக்கன், அகுஸ்தீன் சபையினர்.
5) சிஸ்ரேசியன், அகுஸ்தீன், இயேசு, டொமினிக்கன் சபையினர்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

42. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – யாழ்ப்பாணத்தில் நற்செய்தியை அறிவித்தார்.

B – திருகோணமலையில் இராணுவத்தினர் மத்தியில் பணியாற்றினார்.

C – நற்செய்தியை அறிவிக்க மறையாசிரியர்களைப் பயிற்றுவித்தார்.

D – மறை பரப்புப் பணியாளராக கொழும்பில் பணியாற்றினார்.

E – ஆலயங்களுக்கு அருகில் பாடசாலைகளை அமைத்தார்.

இவற்றுள் பிலிப்பல்தேயுஸ் குறித்த சரியான கூற்றுக்களால் அமைவன,

2) A, C, E  2) A, B, C  3) A, B, E  4) B, C, D  5) C, D, E

43. சிங்கள, தமிழ், கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தையெனப் போற்றப்படுபவர்.

1) வண. பிலிப் பல்தேயுஸ்
2) யோசெப் மெனாசேஸ் அடிகளார்
3) யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்
4) ஜோசவ்வாஸ் அடிகளார்
5) மிகேல்டி மெல்லோ அடிகளார்

44. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக் கல்வித்துறையில் புதிய திருப்பம் ஏற்படக் காரணம்.

1) கோவில் பற்று பாடசாலைகள் நிறுவப்பட்டமை
2) மேற்கத்தேய கல்வி முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டமை
3) அனுபவம் வாய்ந்த துறவிகள் ஆசிரியர்களாகப் பணியாற்றியமை.
4) வாசிப்ப, எழுத்து, எண் கணிதம் என்பன போதிக்கப்பட்டமை
5) மறைக்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை

45. பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்க.

A – போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் வைத்தியசாலைகள் காணப்பட்டன.

B – மதவேறுபாடின்றி மக்களுக்கு சிகிச்சை அளிக்க வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டன.

C – தொற்றுநோய் பரவல் காரணமாக மறை பரப்பாளர்கள் வைத்தியசாலைகளை மூடினர்.

D – புனித யோசவ்வாஸ் அடிகளார் கண்டியில் சின்னம்மை வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணிபுரிந்தார்.

E – தொற்று நோய்களின் பெருக்கத்தினால் மறை பரப்பாளர்கள் இலங்கை வருவதற்கு மறுத்தனர்

இவற்றில் வெளிநாட்டவரின் ஆட்சியின்போது இலங்கையின் சுகாதார சேவைகள் பற்றிய சரியான கூற்றுக்கள் யாவை?

3) A, B, C  2) B, C, D  3) B, D, E  4) A, B, D  5) C, D, E

46. பிரித்தானியர் காலத்தில் வெளியிடப்பட்ட இரண்டு தமிழ் கிறிஸ்தவ பத்திரிகைகள்.

1) உதயதாரகை, பாதுகாவலன்
2) பாதுகாவலன், ஞானப்பள்ளு
3) ஞானப்பள்ளு, நாலு வேதம்
4) உதயதாரகை, சந்தியோகுமாயோர் அம்மானை
5) பாதுகாவலன், சந்தியோகுமாயோர் அம்மானை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

47. கடவுள் மனிதனுக்கு உயிர்மூச்சை அளித்ததன் மூலம் வெளிப்படுத்தப்படுவது. மனிதனின்.
    1) தாழ்மை 2) அதிகாரம் 3) மாண்பு 4) பொறுமை 5) பொறுப்பு

48. இறைவன் ஆதாமுக்கு ஓர் துணைவியைக் கொடுத்தார். இங்கு துணைவி என்ற சொல்லின் பொருளாய் அமைவது,
    A – உதவுபவள்.
    B – அறிவைப் பகிர்ந்து கொள்பவள்.
    C – ஒன்றித்திருப்பவள்.
    D – அதிகாரம் செலுத்துபவள்.
    E – ஆசீர்வதிப்பவள்.
    1) A, D 2) A, C 3) B, D 4) C, E 5) A, D

49. பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய சரியான கூற்று.
    A – கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒற்றுமையை கிறிஸ்துவே விரும்பினார்.
    B – கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான பிரிவினை பிழையானதாகும்.
    C – கிறிஸ்தவ ஒன்றிப்பில் பிரதான சபைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.
    D – கிறிஸ்தவ ஒன்றிப்பு இல்லாமல் நற்செய்திக்கு சான்று பகரமுடியாது.
    E – திருச்சபையின் பன்மைத் தன்மைக்கு கிறிஸ்தவ ஒன்றிப்பு தடையானது.
    2) A, B, C 2) A, C, D 3) B, C, E 4) A, C, E 5) A, B, D

50. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இரு திருத்தந்தையர்கள்
    1) 12ஆம் பத்திநாதர், 23ஆம் அருளப்பர்
    2) 23ஆம் அருளப்பர், 1ஆம் யோன்பவுல்
    3) 6ஆம் சின்னப்பர், 2ஆம் யோன்பவுல்
    4) 23ஆம் அருளப்பர், 6ஆம் சின்னப்பர்
    5) 23ஆம் அருளப்பர், 11ஆம் யோன்பவுல்

(1x50=50 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணை பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2021

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - II<br>Christianity - II | Two Hours<br>Gr. 13 (2021) | 43 | T | II |

**பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

01) (i) உரோமைப் பேரரசன் நீரோவின் காலத்தில் பெற்ற கலாபனையின்போது மறைசாட்சிகளான இருவரைக் குறிப்பிடுக.
(1 x 2 = 2 புள்ளிகள்)

(ii) உரோமப் பேரரசன் தியோக்கிளேசியன் கிறிஸ்தவர்கள் மட்டில் கொண்டிருந்த மனப்பாங்குகள் இரண்டினைக் குறிப்பிடுக? (2 x 2 = 4 புள்ளிகள்)

(iii) கி.பி. 313 இல் மிலான் சாசனத்தின் வழியாக கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள் மூன்றினை விளக்குக. (2 x 3 = 6 புள்ளிகள்)

(iv) இன்றைய சமூகத்தில் கிறிஸ்தவ மனப்பாங்குகள் நலிவடைந்து காணப்படுகின்றன. இவற்றை நிவிர்த்தி செய்ய நீர் செய்யக்கூடிய வழிகாட்டல்கள் நான்கினைத் தருக? (2 x 4 = 8 புள்ளிகள்)

02) (i) பெனடிற் துறவற சபையின் சிறப்பான பண்புகள் இரண்டு தருக?
(1 x 2 = 2 புள்ளிகள்)

(ii) சிலுவைப் போர் ஏற்பட வித்திட்ட காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக? (2 x 2 = 4 புள்ளிகள்)

(iii) மாட்டீன் லூதரின் பிரதான கருத்துக்கள் மூன்றினை எழுதுக. (2 x 3 = 5 புள்ளிகள்)

(iv) கிறிஸ்தவ சபைகளுடனான நல்லிணக்கத்தை ஏற்படுத்த திருச்சபைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நான்கினை முன் வைத்து விளக்குக. (2 x 4 = 8 புள்ளிகள்)

03) (i) சமூகப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட திருத்தொண்டர்களுள் மறையைப் போதிப்பதிலும், திருமுழுக்கு கொடுப்பதிலும் ஈடுபட்ட இருவரை எழுதுக? (1 x 2 = 2 புள்ளிகள்)

(ii) பெந்தக்கோஸ்து நிகழ்வன்று தூய ஆவியானவரின் வருகையின்போது நடைபெற்ற நிகழ்வுகள் இரண்டினை குறிப்பிடுக. (2 x 2 = 4 புள்ளிகள்)

(iii) ஆரம்ப கால திருச்சபையினரிடம் காணப்பட்ட சிறப்பான பண்புகள் மூன்று தருக?
(2 x 3 = 6 புள்ளிகள்)

(iv) சமூகத்தில் குடும்பமாக வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முன்மாதிரியான செயற்பாடுகள் நான்கினை விளக்குக. (2 x 4 =8 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி - II

04) (i) புனித யோசவ்வாஸ் அடிகளார் மூலம் இலங்கை மக்களுக்கு கிடைத்த சேவைகளை ஐந்து விடயங்களை முன் வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) புனித யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்க்கை முன்மாதிரிகையிலிருந்தும், போதனை களிலிருந்தும் நீர் செய்யக்கூடிய செயற்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்குக? (10 புள்ளிகள்)

05) (i) இயேசுவின் காலத்தில் யூதசமூகப் பெண்களின் வாழ்வியல் நிலை பற்றி ஐந்து விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய சமூகத்தில் திருச்சபை, சமூக நிறுவனங்கள் பெண்களின் உரிமைகளுக்காக எவ்வாறு செயற்படுகின்றன. என்பதை விளக்குக? (10 புள்ளிகள்)

06) (i) லூக்கா நற்செய்தியின் ஆசிரியத்துவம், நோக்கம், நூலின் இயல்புகள் என்பவற்றை விளக்குக? (10 புள்ளிகள்)

(ii) சமநோக்கு நற்செய்திப் பிரச்சினைக்கு அடிப்படையாக உள்ள காரணங்களை விளக்குக? (10 புள்ளிகள்)

07) (i) ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட கல்வி செயற்பாடுகளை விளக்குக? (10 புள்ளிகள்)

(ii) ஒல்லாந்த மறை பரப்பாளர்களின் நனகு வளர்ச்சியடைந்த கல்வி முறையினால் இலங்கையில் கிறிஸ்தவம் பரவிய வித்தினை விளக்குக? (10 புள்ளிகள்)

agaram.lk

08) (i) முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீன சமூகத்தினால் தள்ளி வைக்கப்பட்டவர்களான பாவிகள், வரிதண்டுவோர, சமாரியர் ஆகியோரில் இயேசுவின் மனநிலையை விளக்குக? (10 புள்ளிகள்)

(ii) “நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கு பல்லின சமயங்கள், இனக்குழுக்களின் ஒத்துழைப்பு பெரிய வளமாகும்” இக்கூற்றினை விளக்குக? (10 புள்ளிகள்)